சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 38/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | மகேந்திரன் |
| தந்தை பெயர் | : | முனியாண்டி |
| கிராமம் | : | காட்டூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | ஓட்டுனர் |
| வயது | : | 37 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

நீதிமன்ற காவலில் இருந்து வரும் எதிரி ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா-1 வடிவழகனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. 2017 ஆம் ஆண்டு அ.சா-1ன் வீட்டிற்க முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாடா சுமோ இரவு 12.00 மணிக்கு தீ பிடித்து எரிந்து கொண்டிருந்தாக சத்தம் கேட்டு போய் பார்த்தோம். அங்கு வாகனம்

எரிந்து கொண்டிருந்தது. அருகில் இருந்தவர்கள் தீயை அனைக்கு முயற்சி செய்தார்கள். நானும் உதவி செய்தேன். என்னை போலீசார் விசாரணை செய்தபோது இதை சொல்லியுள்ளேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.16 17:47:06 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.